# மெத்தடிஸ்ட் மலர்

நவம்பர் - 2020

நாங்கள் தேவனுக்குக்
கிறிஸ்துவின் நற்கந்தமாய்
இருக்கிறோம்.
2 கொரிந்தியர் 2:15



## " கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன் "

சங்கீதம் 34:1


மெத்தடிஸ்ட் தமிழ் திருச்சபை

எண் 29, ரித்தர்டன் சாலை, வேப்பேரி, சென்னை – 600007
தொலைபேசி: அலுவலகம் 48512111
தலைமை போதகர் 42146725 / இணை போதகர் 42119502

# அருட்பணியாளர்களின் சரிதை!

## ஜியார்ஜ் முல்லர் ! 1805 - 1898

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே உங்கள் யாவரையும் அருட்பணியாளர்களின் சரிதை மூலமாக சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த வருடம் பிப்ரவரி மாதத்திலிருந்து ஜியார்ஜ்முல்லர் அவரின் வாழ்க்கை வரலாற்றை பார்த்து வருகிறோம்.

**பிப்ரவரி மாதம்:-** ஜியார்ஜ்முல்லரின் பிறப்பு, பணத்தின் மதிப்பு தெரியாமல் ஆடம்பரமான செலவு செய்தார். இதை மறைப்பதற்காக பல பொய்களை தன் பெற்றோரிடம் சொன்னார். முல்லரின் சிந்தனையில் **தேவன்** இல்லவே இல்லை. முல்லரின் தகப்பனார் அவரை வேறொரு பள்ளியில் சேர்த்தார். அங்கு அப்பள்ளியின் முதல்வரது வீட்டிலே இருந்து படித்தார். வகுப்பிலுள்ள பிற மாணவர்களுக்கு முன் உதாரணமாக காண்பிக்க சில மாற்றங்களை செயல்படுத்தினார்.

**மார்ச் மாதம்:-** நல்ல மனிதனாக மாற பல தீர்மானங்கள் எடுத்தார். ஆனால் அவரது இரட்சிப்புக்கு உதவி செய்ய முடியவில்லை 1825 ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சிலர் பாட்டுப்பாடி, வசனத்தை வாசித்து, ஜெபிக்கும் கூட்டத்திற்கு போக முல்லர் வாஞ்சை கொண்டார். இந்த கூட்டத்திலிருந்து திரும்பியதும் தனது பாவங்கள் முழுவதையும் அறிக்கை செய்ய தூண்டியது. தனது 21 வது வயதில் ஒரு சகோதரன் முழங்காலில் நின்று ஜெபித்த அந்த காட்சி அவர் நினைவில் பதிந்தது. பின்னர் பீட்டரிடம் சுவிட்சர்லாந்திற்கு நாம் சுற்றுலா சென்றபோது, நாம் அனுபவித்த இன்பங்கள் எல்லாம், இன்று மாலையில் நாம் அடைந்த இன்பத்திற்கு ஈடாகாது என சொன்னார்.

ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை நாம் மெத்தடிஸ்ட் மலர் உருவாக்கப்பட முடியாத சூழ்நிலை இருந்தது. இந்த நவம்பர் மாதத்திலிருந்து தொடர்ந்து தேவனுக்கு சித்தமானால் பார்க்கலாம்.

**நவம்பர் மாதம் :-** முல்லர் மற்றவர்களிடம் அவர்களது ஆத்தும நன்மையைக் குறித்துப் பேசி, அவர்கள் பாவங்களைக் குறித்து எழுதி, கைப்பிரதிகளையும், மிஷனரிகள் தொடர்பான பேப்பர்களையும் அநேகருக்கு விநியோகம் செய்து இவ்விதமாய் தேவனுக்கு ஊழியம் செய்ய ஆரம்பித்தார். 2 மாதங்களுக்கு ஒருமுறை ஹாலேயில் உள்ள இறையியல் படிக்கும் ஏழை மாணவர்களுக்கென, பேராசிரியர் ஏ.எச். பிராங்கே என்பவர் நிறுவிய புகழ் வாய்ந்த அநாதைகளின் இல்லத்தில் தங்கிக் கொண்டார். திரு. பிராங்கே செய்த எளிய, நம்பிக்கையுள்ள, முன் மாதிரியான ஜெபத்திற்குத் தான் எப்படிக் கடமைப்பட்டவர் என்பதை அநேக சமயங்களில் அவர் குறிப்பிட்டுள்ளார். ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் அவரது வாழ்க்கை வரலாற்றைப் படித்து, அவர் கிறிஸ்துவைப் பின் பற்றியது போலத் தானும் அவரது முன் மாதிரியைப் பின்பற்ற உற்சாகப்படுத்தப்பட்டார். பரிசுத்த வேத வாக்கியங்கள்தான் எல்லா ஞானத்திற்கும் சக்திக்கும் ஊற்றாயிருக்கின்றன என்ற பாடத்தையும் அவர் கற்றுக் கொள்ள வேண்டியதாயிருந்தது.

தேவனுடைய வார்த்தையை அவர் புறக்கணித்ததால், அநேக ஆண்டுகளாய் ஆவிக்குரிய வாழ்க்கையில் சிறு பிள்ளையாக, அறியாமையிலும், இயலாமையிலும் இருந்து விட்டதாக தனது பிற்கால வாழ்வில் அவர் புலம்பினார். அவரது வாழ்வின் கடைசி 20 ஆண்டு காலத்தில், வருடத்திதற்கு நான்கு அல்லது ஐந்து முறை வேதாகமத்தை மிக ஜாக்கிரதையாக முழுமையும் வாசித்ததின் பலனாக தேவனைப் பற்றிய அறிவு மிகவும் வேகமாக அதிகரித்தது. தேவனுடன் நெருக்கமாக நடந்து செல்வது தேவனுடைய வார்த்தையால் உத்வேகப்படுத்தப்படுவதால் சாத்தியமாகும் என்பதை அறிந்து கொண்டதும் அவர் தேவனுடன் நெருங்கி நடக்க ஆரம்பித்தார். ஜியார்ஜ்முல்லரின் இருதயத்தில் இந்த அக்கினி இன்னும் பிரகாசமாய் எரியத் துவங்கியது.

அவர் முதலில் மிஷன் ஊழியத்துக்காக புகாரெஸ்ட் செல்ல விரும்பினார். ஆனால், தேவன் தன் ஊழியருக்கு வேறே திட்டங்களைக் கொண்டிருந்தார். ஒரு காலம் போலந்தில் உள்ள யூதர்கள் மத்தியில் உழைத்துக் கொண்டிருந்த திரு. ஹெர்மான்பால் என்ற மிஷனரி முல்லரின் அறையில் நடந்த கூட்டத்திற்கு வந்திருந்தார். யூதர்களின் மத்தியில் தனது ஊழியம் தொடர முடியவில்லை என தெரிவித்தார். வழி தவறிக் கொண்டிருந்த மக்கள் மத்தியில் உழைப்பதற்கான பலமான உணர்வைப் பெற்றார். இந்த சமயத்தில், டாக்டர் தோலக் என்ற லண்டன் மிஷனரி சொசைட்டியின் பிரதிநிதி முல்லரிடம் யூதர்கள் மத்தியில் உழைக்க அவருக்கு சம்மதமா என்று கேட்டார். மிஷனரி ஊழியத்துக்கென முல்லர் பயிற்சி பெறும்படியாக லண்டனுக்கு வருவதாக அறிந்தனர்.

(தொடரும்)

## ஜியார்ஜ் முல்லரின் பொன்னுரை!

★ கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுவதற்கு வாய்ப்புகள் கொடுக்கும்போதே அற்பணிப்பதுதான் ஞானமான செயலாகும்!

# தலைமை போதகரின் மடல்!

**"கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்;**

**அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்"** (சங்கீதம் 34:01)

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, ஆண்டவரும், இரட்சகருமாகிய **இயேசு கிறிஸ்துவின்** இனிதான நாமத்தினாலே உங்கள் ஒவ்வொருவரையும் மிகுந்த அன்போடு வாழ்த்துகிறேன். **“சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. அல்லேலூயா”** (சங்கீதம் 150:06) என்னும் சங்கீதப்பாடலின் வார்த்தைகள் உண்மையாகவே நாம் தேவனைத் துதிக்க நம்மைத் தூண்டுகின்றன. இந்த தலைமுறையினருடைய வாழ்க்கையில், 2020 மார்ச் மாதம் துவங்கி கடந்த ஏழு மாதங்கள் மறக்க முடியாத வரலாற்று நினைவலைகளாக மாறியுள்ளதை நாம் ஒருபோதும் மறுக்கவே இயலாது.

கோவிட் - 19 *(Covid-19)* என்ற கொரோனா என்னும் பெருந்தொற்று உலகத்தில் கோடிக்கணக்கான நபர்களைப் பாதித்துள்ளது என நாம் அறிவோம். ஆனால் இந்தப் பெருந்தொற்று நோய் **இந்தியாவில், தமிழகத்தில், சென்னையில்** என்று மாத்திரமல்ல நமது குடும்பங்களில் கொண்டு வந்த பயங்கரத்தை, பேராபத்தை மிகச் சுலபமாக மறக்க இயலாது. ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் என கால்நடையாய் நடந்து இலட்சக்கணக்கானோர் தங்களது இருப்பிடம் செல்ல முயற்சித்தது நமது கண்களுக்கு முன்பாக இன்னும் இருக்கிறது. ஊரடங்கின் காரணமாக வேலையிழந்து, வருமானம் இழந்து, இப்போது மீண்டுமாய் தங்களது சகஜ வாழ்க்கையை கட்டி எழுப்ப பலர் மேற்கொண்டுள்ள பிரயாசங்களை நாம் இன்னமும் கண்டுகொண்டுதான் இருக்கிறோம். மாத்திரமல்லாது, இந்நோயின் காரணமாக தங்களுக்குப் பிரியமானவர்களை இழந்து இன்னும் ஆறுதலடைய இயலாதிருக்கும் அனேகரை நாம் ஆறுதல்படுத்த முயற்சித்திருக்கிறோம்.

பிரியமானவர்களே, மேற்கூறிய அனைத்தையும் பலநிலைகளில் நாம் அனுபவித்திருந்தாலும், தேவனுடைய பெரிதான கிருபையால் நாம் இன்னமும் ஜீவனுள்ளவர்களாய் காணப்படுவது தேவனுடைய மாபெரும் இரக்கங்களின் அடையாளம் என்பதை நினைவிற்கொள்வோம். தேவனுடைய பராமரிப்பையும், பாதுகாப்பையும் நமது வாழ்க்கையில் போதுமானதாய் பெற்று அனுபவித்தும், இன்னமும் நமது எதிர்காலத்தைக்குறித்து பயங்களும், சகஜ வாழ்க்கையைக் குறித்து ஐயங்களும் நமது விசுவாசத்தைப் பரீட்சிக்கின்றது என்பது உண்மையே. இத்தகைய சூழலில்தான் தேவ வார்த்தை நமக்கு நம்பிக்கையை தருகின்றது.

**“ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்திற்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று; உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?”** (மத்தேயு 06:25)

(தொடர்ச்சி பின்பக்கத்தில்)

இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவருக்கும், விசேஷமாய் இதை வாசிக்கின்ற உங்கள் ஒவ்வொருவருக்கும் **தேவன்** கொடுக்கும் நம்பிக்கையின் வார்த்தை **கவலைப்படாதிருங்கள்!** சர்வலோகத்தையும் படைத்த **தேவன்** வானத்துப் பட்சிகளைப் போஷித்து, காட்டுப் புஷ்பங்களையும் உடுத்துவிக்க உண்மையுள்ளவராயிருப்பார் எனில், தேவனுடைய சாயலாகவே சிருஷ்டிப்பின் மகுடமாகவே படைக்கப்பட்ட உங்களையும், என்னையும் போஷித்து, பராமரிப்பது எவ்வளவு உண்மையாய் இருக்கிறது! எனவே நாளைக்காக **கவலைப்படாதிருங்கள்.**

எனவே இத்தகைய பெருந்தொற்றுக் காலத்திலும் நாம் சமாதானத்துடன், கவலையை மேற்கொண்டு வாழ்வதற்கு பின்வரும் மூன்று காரியங்களை மனதிற்கொண்டு வாழ்வதற்கு தேவன் நம்மை அழைக்கின்றார்.

முதலாவதாக, **விசுவாசம்** *(Faith)* என்ற வார்த்தை மற்றெல்லாக் காலத்தைக்காட்டிலும், இக்காலத்தில் மிக அதிகமாய் நம்மில் காணப்படுவது தேவை. இம்மட்டும் உங்களை, என்னை வழிநடத்தி வந்த தேவன் எதிர்காலத்திலும் தொடர்ந்து நம்மை பாதுகாத்து, பராமரிப்பார் என்ற நிச்சயம் நமது வாழ்வின் நங்கூரமாய் இருப்பது தேவை (மத்தேயு 06:30)

இரண்டாவதாக, **பரம பிதா** *(Father)* வாகிய நமது **தேவன்,** அவரது பிள்ளைகளாகிய நமக்கு இன்னது தேவை என்று அறிந்திருப்பது மாத்திரமல்ல, அத்தேவைகள் எல்லாவற்றையும் சந்தித்து நம்மை வழிநடத்துவதற்கும் அவர் வல்லமையுள்ளவராயிருக்கிறார். (மத்தேயு 06:32)

இறுதியாக, **முதலாவது** *(First)* என்ற வார்த்தை கூறுவது யாதெனில் நமது வாழ்வின் எல்லா நிலைகளிலும், தேவனுடைய சித்தத்திற்கே முன்னுரிமை என்ற அசைக்கமுடியாத அர்ப்பணத்தை வெளிப்படுத்த நம்மை அழைக்கின்றது. (மத்தேயு 06:33)

**“கவலைப்படாதிருங்கள்”** என்ற தேவ கட்டளையை தேவனுடைய வாக்குத்தத்தமாகவே ஏற்றுக் கொள்வோம், தற்கால சூழ்நிலைகளில் மாத்திரமல்ல, எக்காலத்திற்கும் தேவையான தேவப் பிரசன்னம், பராமரிப்பு, பாதுகாப்பை நாம் நிச்சயமாகவே பெற்றுக் கொள்வோம். இத்தகைய மாபெரும் கிருபையை ஆண்டவர் உங்கள் ஒவ்வொருவருக்கும் தந்து உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

கிறிஸ்துவின் அருட்பணியில்,

**அருட்திரு. சாம் சுடலையாண்டி**

## மாதாந்திர பிரசங்க விபரங்கள் (காலை, மாலை)

### 2020-நவம்பர் மாத தலைப்பு : "விசுவாசம்!"

| தேதி / நேரம் | அருளுரை தலைப்பு | வேதப்பாடம் | | அருளுரையாளர் |
|---|---|---|---|---|
| **01.11.20** | | | | |
| காலை 08.30 | அங்கீகரிக்கப்படும் விசுவாசம் | எபிரேயர் | 11:08- 19 | அருட்திரு சாம் |
| காலை 10.30 | அங்கீகரிக்கப்படும் விசுவாசம் | எபிரேயர் | 11:08- 19 | அருட்திரு சாம் |
| மாலை 05.00 | அங்கீகரிக்கப்படும் விசுவாசம் | எபிரேயர் | 11:08- 19 | அருட்திரு சாம் |
| **08.11.20** | | | | |
| காலை 08.30 | நிலைத்திருக்கும் விசுவாசம் | 2 தீமோத். | 01:03- 12 | அருட்திரு சாம் |
| காலை 10.30 | நிலைத்திருக்கும் விசுவாசம் | 2 தீமோத். | 01:03- 12 | அருட்திரு சாம் |
| மாலை 05.00 | நிலைத்திருக்கும் விசுவாசம் | 2 தீமோத். | 01:03- 12 | அருட்திரு சாம் |
| **15.11.20** | | | | |
| காலை 08.30 | வெளிப்படும் விசுவாசம் | 2 தீமோத். | 02:20- 26 | அருட்திரு தானியேல் |
| காலை 10.30 | வெளிப்படும் விசுவாசம் | 2 தீமோத். | 02:20- 26 | அருட்திரு தானியேல் |
| மாலை 05.00 | வெளிப்படும் விசுவாசம் | 2 தீமோத். | 02:20- 26 | அருட்திரு தானியேல் |
| **22.11.20** | | | | |
| காலை 08.30 | ஜெயிக்கும் விசுவாசம் | 2 தீமோத். | 04:06- 08 | அருட்திரு தானியேல் |
| காலை 10.30 | ஜெயிக்கும் விசுவாசம் | 2 தீமோத். | 04:06- 08 | அருட்திரு தானியேல் |
| மாலை 05.00 | ஜெயிக்கும் விசுவாசம் | 2 தீமோத். | 04:06- 08 | அருட்திரு தானியேல் |
| **29.11.20** | | | | |
| காலை 08.30 | "ஆற்றுங்கள், தேற்றுங்கள்" | ஏசாயா | 40:01- 11 | அருட்திரு சாம் |
| காலை 10.30 | "ஆற்றுங்கள், தேற்றுங்கள்" | ஏசாயா | 40:01- 11 | அருட்திரு சாம் |
| மாலை 05.00 | "ஆற்றுங்கள், தேற்றுங்கள்" | ஏசாயா | 40:01- 11 | அருட்திரு சாம் |

## முக்கிய அறிவிப்புகள்!

### ★★ ஆலய ஆராதனை விபரங்கள்!

ஞாயிறு முதல் ஆராதனை : காலை 08.30 மணி
ஞாயிறு இரண்டாம் ஆராதனை : காலை 10.30 மணி
ஞாயிறு மூன்றாம் ஆராதனை : மாலை 05.00 மணி

### ★★ வேத ஆராய்ச்சி நேரம்! (*Zoom* வழியாக)

பிரதி வியாழன் : மாலை 7.00 மணி
பிரதி சனி : மாலை 5.00 மணி

**MOTTO & GOAL**

ஆளுக்கொரு புதிய நபர்
ஆண்டுக்கொரு புதிய திருச்சபை

# ஆலயங்களில் சபையார் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள்!

**தமிழக அரசின் நிலையான வழிகாட்டு நடைமுறைகள்**

*Standard Operating Procedure (SOP)*

## பொதுவாக கடைபிடிக்க வேண்டிய நோய் தடுப்பு நடைமுறைகள்

★ 10 வயதிற்கு கீழானவர்கள், 65 வயதிற்கு மேல் உள்ளவர்கள், கர்ப்பிணிகள், வியாதியுற்றோர், காய்சசல், சளி, இருமல் அறிகுறிகள் உள்ளவர்கள் ஆராதனையில் பங்கு பெறக்கூடாது, முகக்கவசம் அணிய வேண்டும்.

★ சமூக இடைவெளி விட வேண்டும்.

★ ஆராதனைக்கு வருகிறவர்கள் ஆராதனைக்குப் பின்பு ஆலயத்தை சுத்தம் செய்ய வேண்டியுள்ளதால், தயவுடன் கடந்து செல்லவும்.

## ஆலயம், ஆலய வளாகத்தில் கடைபிடிக்க வேண்டிய நோய்தடுப்பு நடைமுறைகள்

★ ஆலய வளாகத்தில் எச்சில் துப்பக்கூடாது. சுற்றுப்புறத்தை தூய்மையாக பாதுகாப்பது அவசியம்

★ ஆலயத்திற்குள் கை குலுக்கவோ, அருகில் நின்று பேசவோ கூடாது.

## முக்கிய அறிவிப்புகள் !

**★★ மெத்தடிஸ்ட் தமிழ் திருச்சபை – குருசேகர மாநாடு!**

நாள் : 21.11.2020 (சனிக்கிழமை)
நேரம் : காலை 10.00 மணி
இடம் : NMGP ஹால் முதல் தளம்

**★★ திருச்சபைக்கான புதிய தொலைபேசி எண்கள்!**

திருச்சபையின் அலுவலகம் : 044 – 48512111
தலைமை போதகர் : 044 – 42146725
இணை போதகர் : 044 – 42119502



# வேத விருந்து



★ தக்க, சுருக்க, நேரிடையான பதில், அதன் வசனம் (Reference) இவைகள் முதலிடம் பெறுகிறது. 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் இதில் பங்கு பெறலாம். 15 கேள்விகளுக்கும் தமிழில் பதில் எழுத வேண்டும்.

★ 2020 நவம்பர் மாத வினாக்கள் வேதாகமத்தினின்று தயாரிக்கப்பட்டுள்ளது.

1. **"இதோ வேலைக்காரரின் கண்கள்..."** என்று ஆரம்பித்து **"... எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது"** என்பதாக முடிவடைகிற வசனத்தை முழுமையாய் பூர்த்தி செய்து எழுதவும்.
2. தேற்றரவாளன் வந்து உலகத்தைக் கண்டித்து உணர்த்துவன யாவை? மற்றும் இவைகளை முறையே அவர் கண்டித்து உணர்த்துவது எதெதினாலே என சத்தியவேதம் நமக்கு எடுத்துரைக்கிறது?
3. **"அதில் கோதுமைக்குப் பதிலாக முள்ளும், வாற்கோதுமைக்குப் பதிலாகக் களையும் முளைக்கக் கடவது"** என்றது யார்? இங்கு **"அதில்"** என்பது எதனைக் குறிப்பிடுகிறது?
4. யோவான் பதினான்காம் அதிகாரம் இருபத்தி ஆறு அல்லது இருபத்து ஏழாம் வசனம் நமக்கு உறுதியிட்டு சொல்வதை அப்படியே உள்ளபடி எடுத்து எழுதவும்.
5. **"..... ஒரு பட்டயம் மாத்திரம் இருந்தால் இப்பொழுதே உன்னைக் கொன்று போடுவேன் என்றது யார்? யாரைப் பார்த்து? மற்றும் இது எப்பொழுது கூறியது என்பதாக முந்தின ஓர் வசனம் குறிப்பிடுகிறது?"**
6. எவனில் தேவன் நிலைத்திருக்கிறார் எனவும் மற்றும் தேவனில் எவன் நிலைத்திருப்பதாகவும் ஓர் வேதவசனம் உறுதியாய் அறிக்கையிடுகிறது? அதோடுகூட இப்படி நிலைத்திருப்பதை நாம் எதினாலே அறிந்திருக்கிறோம் என்பதை உறுதியளிக்கிறதான இவ்வதிகாரத்தின் மற்றொரு வசனம் யாது?
7. **".... இவ்விதமாய் அந்தப் பூமி பார்வோனுடையதாயிற்று என்பதில் இது எவ்விதமாய் என்று குறிப்பிடுகிறதை மட்டும் இவ்வசனத்திலிருந்து எடுத்து கவனமாய் எழுதவும்."**
8. **"இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்"** என்பதில் அவர்களிடத்திற்கு என்பது யாரைக் குறிப்பிடுகின்றது? இப்படி அனுப்பப்படுவது எவைபொருட்டு எனவும் ஓர் வசனம் குறிப்பிடுகிறது?
9. யோவான் பதின்மூன்றாம் அதிகாரம் வசனங்கள் முப்பத்து நான்கு மற்றும் முப்பத்து ஐந்தாம் வசனங்களை **மனனம்** செய்து பிழையின்றி எழுதவும்.
10. பெலிஸ்தரே திடன் கொண்டு... புருஷராயிருந்து, யுத்தம் பண்ணுங்கள் என்று சொல்லிக் கொண்ட பொழுது நடந்தது யாவை என்பதை எப்படியாக இந்த வசனமும் இதன் அடுத்த வசனமும் குறிப்பிடுகின்றன என்பதை மட்டும் எழுதவும்.

## வேதாகமத்தினின்று புதிர் பகுதி

கீழ்க்காணும் எழுத்துக்கள் அமைந்துள்ள புதிர் கட்டப்பகுதியில் இடமிருந்து வலமாக, மேலிருந்து கீழாக பொருள்படும்படியான பல வார்த்தைகள் அடங்கியுள்ளன. விடையாக அமையும் குறிப்பிட்ட சில அவ்வார்த்தைகளுக்குரியதாய் அமையும் கீழ்க்கண்ட பட்டியலைப் படித்து, கேள்வியின் வரிசை எண்ணுக்கு ஏற்ப அதனதின் பதிலைக் கண்டுபிடித்து எழுதவும். வசனம் (Reference) அவசியம் தேவை. பதிலாகக் கண்டுபிடித்து இடமிருந்து வலமாக அல்லது மேலிருந்து கீழாக அமையும் வார்த்தையைப் புதிர்கட்டப் பகுதியிலும்கூட அழுத்தமாக சுற்றுக் கட்ட கோடிட்டுக் காட்டவும்.

11. a) இது, பன்னிரண்டு முத்துக்களாயிருந்தவை ஆகும்.
    b) இது, "இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்" என்று விண்ணப்பித்த நபர் ஆகும்.
12. a) இது, இயேசுவின் சரீரத்தைத் துணிந்து போய் கேட்ட கனம்பொருந்திய ஆலோசனைக்காரனது ஊர் ஆகும்.
    b) இது, "நீர் எனக்கு இரத்த சம்பந்தமான புருஷன்" என்ற நபர் ஆகும்.
13. a) இது, அப்போஸ்தலருக்குள் பெயர் பெற்றவர்களும் மற்றும்... காவலில் கட்டுண்டவராய் இருந்த இருவருள் ஒரு நபர் ஆகும்.
    b) இது, மோசேக் தூபால் ஜாதிகளின் அதிபதியான நபர் ஆகும்.

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மீ | கா | சீ | ன் | தே | யூ | தா | கே | பா | ர |
| 2 | மோ | ஏ | லா | ஆ | ரா | னி | கோ | யா | வி | எ |
| 3 | சே | எ | ரி | கோ | கு | யா | ன் | சி | சீ | லி |
| 4 | யோ | வா | ன் | ர் | எ | ம் | மா | ப் | கா | மா |
| 5 | ஏ | ச | பே | ல் | லி | த் | தா | போ | ர் | ஏ |
| 6 | க | ல் | தே | யா | சா | லீ | ம் | ரா | கே | ல் |
| 7 | அ | க | பு | சீ | பா | மா | கா | ள் | கி | பெ |
| 8 | ப | ள் | ள | ம் | த் | எ | தா | எ | லா | பே |
| 9 | தா | னி | யே | ல் | அ | ரி | ம | த் | தி | யா |
| 10 | ண் | யோ | சே | ப் | பு | கோ | ரி | ரோ | தை | ள் |

★ வேத விருந்துடன் இணைத்து அனுப்பவும்.

★ கீழ்க்காணும் கேள்விகள் ஜியார்ஜ் முல்லர் பகுதியிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. (தக்க, சுருக்க, நேரிடை பதில் தேவை)

14. கொடுக்கப்பட்டுள்ள இம்மாதம் நவம்பருக்கான ஜியார்ஸ் முல்லரின் பொன்னுரை யாது?
15. லண்டன் மிஷனரி சொசைட்டியின் பிரதிநிதி யார்? அவர் ஜியார்ஜ் முல்லரிடம் யாது கேட்டார்?

★ 2020 நவம்பர் மாத வேத விருந்து பகுதிகளின் விடைகளை 2020 நவம்பர் 18-ம் தேதிக்குள் வீட்டு விலாசத்துடன் உறையுள் இட்டு, ஒட்டி அனுப்பவும்.★ தொலைபேசி எண். 044–48512111. ★ அனுப்ப வேண்டிய முகவரி : மெத்தடிஸ்ட் மலர், மெத்தடிஸ்ட் தமிழ் திருச்சபை. எண். 29, ரித்தர்டன் சாலை, வெப்பேரி, சென்னை – 600 007. ★★ சென்னைக்கு வெளியே மற்றும் அயல்நாடுகளில் உள்ள மெத்தடிஸ்ட் மலர் வாசகர்களுக்கு உதவிட இருப்பது; *web : www.mtcvepery.org*



# ஜான் வெஸ்லியின் சிந்தனை முத்துக்கள்

- எல்லா வாசிப்பும் தியானத்தோடும் ஜெபத்தோடும் செய்யப்பட வேண்டும். கொஞ்சம் வாசி. தியானம் செய். அதிகமாக ஜெபி.
- உண்மையை நான் எங்குகண்டுபிடித்தாலும் அதை நான் நேசிக் கிறேன்.
- நாம் ஏன் கடவுளுடைய பரிசுத்த ஓய்வு நாளை மற்ற ஆறு நாட்களை விட குறைவானதாய் பயன்படுத்துகிறோம்.
- இயற்கையும், சாத்தானும் தனி ஜெபத்தை எப்பொழுதும் எதிர்க்கின்றன. பாடுகள் தனி ஜெபத்திற்கு தடையாயிருப்பதில்லை. ஜெபிப்பதற்கு அதிக தயக்கம் வருமாயின் அதை முறியடித்து முன்னேறும் போது பெரிய ஆசீர்வாதம் உண்டு.
- ஆசீர்வாதமான பணியாகிய ஓய்வுநாட்பள்ளியில் நீங்கள் பொறுப் பெடுத்துக் கொண்டதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். தேசம் முழுவதும் ஒரு பெரிய எழுப்புதலை அது கொண்டுவர ஏதுவாக அமையும்.
- கடவுள் உனக்கு ஒரு நாவைக் கொடுத்திருக்கிறார் ஏன்?
  - அதன் மூலம் நீ அவரை துதிக்கவும் மகிமைப்படுத்தவுமே.
  - வருங்காலங்களில் உன்னுடைய உரையாடல்கள் எல்லாம் கேட்பவர்களுக்கு  கிருபையை கொடுப்பதாக இருக்கட்டும் இப்படிப்பட்ட உரையாடல்கள் மற்றவர்கள் நம்பிக்கையோடு வாழ உதவி செய்யும்.